

Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: | பதிவு எண்: | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

## TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]



Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

**Question Booklet No:** ______

**Register Number:** | | | | | | | | | | |

## TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்

## Part-A- General Tamil

## 12 ஆம் வகுப்பு – பாடம் – 5, 6, 7, 8

| | |
|---|---|
| வினாக்கள் : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் : 150 |
| Questions : 1 - 100 | Total Marks : 150 |

1. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   கூற்று 1 : சென்னை மாநகரம், தென்னிந்தியாவின் நுழைவாயில் என்று அழைக்கப்படுகிறது.
   கூற்று 2 : இந்தியாவில் ஐந்து நூற்றாண்டுகளாக, ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு அடித்தளமாகவும் அதிகார மையமாகவும் விளங்கிய கடற்கரை நகரம் மதராசபட்டிணம்.
   மேற்கண்ட கூற்றுகளில் எது /எவை தவறு?
   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 1, 2
   (D) எதுவுமில்லை

2. சென்னை பக்கிங்காம் கால்வாய் பின்வரும் எந்த ஆறுகளை இணைக்கிறது?
   1. மத்திய சென்னைக்குக் கூவம்
   2. தென் சென்னைக்கு அடையாறு
   3. பாலாறு
   4. வடசென்னைக்கு கொற்றலையாறு
   (A) 1,2,3
   (B) 1,2,4
   (C) 1,3,4
   (D) அனைத்தும்

3. இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை,
   1. இப்பாணியில் 1768ல் கட்டி முடிக்கப்பட்ட முதல் கட்டடம் சேப்பாக்கம் அரண்மனை ஆகும்.
   2. இது முகலாயக் கட்டடக்கலை, பிரித்தானியக் கட்டடக்கலை, இந்திய பாரம்பரிய பாணி ஆகியவற்றை கலந்து உருவாக்கப்பட்டது.
   3. சென்னையில் உள்ள உயர் நீதிமன்றம், ரிப்பன் கட்டிடம் ஆகியவை இந்த கட்டிடக்கலையின் வடிவில் கட்டப்பட்டன.
   மேற்கண்டவற்றில் எது/எவை தவறன்று?
   (A) 1, 2, 3
   (B) 2, 3
   (C) 1, 3
   (D) 1, 2

4. பொருத்துக.

a. கன்னிமாரா நூலகம் - 1.2010
b. அண்ணா நூற்றாண்டு நூலகம் - 2.1869
c. சென்னை இலக்கியச் சங்கம் - 3.1860
d. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் - 4.1812

(A) 1 2 3 4
(B) 3 1 4 2
(C) 3 4 2 1
(D) 2 3 4 1

5. "மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழா கண்டான்....."
- அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் காண்க.

(A) ஆரவாரவிழா, பூசையிடும் உத்திர விழா.
(B) ஆரவார விழா, விழாக்கள் நிறைந்த
(C) விழாக்கள் நிறைந்த, எழுச்சிதரும் விழா
(D) பூசையிடும் உத்திர திருவிழா, எழுச்சிதரும் விழா

6. பாடல்வரிகளுக்கேற்ற நூலை தேர்ந்தெடு.

1. நெல்லின் நேரே வெண்கல உப்பு - அகநானூறு
2. கதழ்கோல் உமணர் காதல் மடமகள் - குறுந்தொகை

(A) 1 சரி 2 தவறு
(B) 1 தவறு 2 சரி
(C) 1, 2 தவறு
(D) 1, 2 சரி

7. தோப்பில் முகமது மீரான் தொடர்பான பின்வரும் தகவல்களில் எவை சரி?

1. பிறந்த ஆண்டு - 1944
2. இடம்: கன்னியாகுமரி
3. தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் கதை எழுதுவதில் வல்லவர்.

(A) 1, 2, 3
(B) 1, 2
(C) 2, 3
(D) 1, 3

8. "கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண்டு ஊசியின்....." இப்பாடல் வரிகளுக்கேற்ற நூல் எது?

(A) அகநானூறு
(B) திருவாசகம்
(C) புறநானூறு
(D) சிலப்பதிகாரம்

9. 'வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப' - எனும் பாடலில் எந்த படிமம் பயின்று வந்துள்ளது?

(A) பயன்படிமம்

(B) வினைப்படிமம்

(C) மெய்ப்படிமம்

(D) உருப்படிமம்

10. 'என்னிடம் இரண்டு சரக்குக் கப்பலோடு மூன்றாவதாக ஒரு கப்பலும் உள்ளது' என்று வ.உ.சி பெருமிதத்துடன் யாரைக் குறிப்பிடுகிறார்?

(A) பாரதி

(B) சுப்பிரமணிய சிவா

(C) சோமசுந்தர பாரதியார்

(D) திரு.வி.க

11. பின்வருவனவற்றுள் எந்த இணை தவறு?

(A) Conviction - தண்டனை

(B) Plaintiff - வாதி

(C) Allegation - சாட்டுரை

(D) Jurisdiction - நீதி வரையறை

12. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. வசனம் என்பது கதை நகர்வுக்கு உதவுவது ஆகும்.
2. திரைப்படத்தில் வசனம் சிறப்பாக அமைந்தால் காட்சிக்கு கூட இரண்டாம் இடம்தான்.

மேற்கண்டவற்றில் எது சரியல்ல?

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 1, 2

(D) எதுவுமில்லை

13. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க.
   1. முதன்முதலில் படங்காட்டுதல், சாமிகண்ணு வின்சென்ட் என்பவர் ஆரம்பித்தார்.
   2. முதன்முதலில் மதுரை கூடாரத்தில் படம் காட்டப்பட்டது.
   3. அவர் 1909 இல் மதராசில் கூடாரம் போட்டு சலனப்படங்களை திரையிட்டார்.
   4. சென்னையிலிருக்கும் போது சினிமா தொழிலை நிறுவ ஒரு முக்கியமான அடியெடுத்து வைத்தவர் ஆவார்.

   மேற்கண்ட கூற்றுகளில் எது/ எவை சரி?
   (A) 1, 2, 3
   (B) 1, 3, 4
   (C) 1, 2, 4
   (D) அனைத்தும்

14. "மூச்சு நின்று விட்டால் பேச்சும் அடங்கும்" இக்கவிதை வரிகளுக்குரிய ஆசிரியர் யார்?
   (A) நகுலன்
   (B) சி. மணி
   (C) தோப்பில் முகமது மீரான்
   (D) சாகுல் ஹமீது

15. சொல்லும் பொருளும்: தவறானது எது?
   1. வாரம் - ஆடல் வகை
   2. குயிலுவ மாக்கள் - ஆடலில் தேர்ந்த பெண்கள்
   3. ஆமந்திரிகை - நடன முத்திரை

   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 1, 3
   (D) அனைத்தும்

16. யாழின் வகைகள்,
   1. 21 நரம்புகளைக் கொண்டது பேரியாழ்.
   2. 17 நரம்புகளைக் கொண்டது மகரயாழ்
   3. 16 நரம்புகளைக் கொண்டது சகோடயாழ்
   4. 7 நரம்புகளைக் கொண்டது செங்கோட்டியாழ்

   மேற்கண்டவற்றில் எத்தனை சரி?
   (A) 4
   (B) 3
   (C) 2
   (D) 1

17. சிலப்பதிகாரம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது/ எவை சரியற்றது?
   1. தமிழரின் கலை, நாகரீகம், பண்பாடு முதலானவற்றை உள்ளடக்கிய கருவூலமாகத் திகழ்கிறது.
   2. அரசகுடி மக்களை காப்பியத்தின் தலைமக்களாக வைத்துப் பாடியதால் இது குடிமக்கள் காப்பியம் என்று அழைக்கப்படுகிறது.
   3. இது முதன் முதலாக பெண்ணை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு, அரசனை எதிர்த்து வழக்காடியதை பாடியதால் புரட்சி காப்பியம் எனப்படுகிறது.

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) எதுவுமில்லை

18. பொருத்துக.

a. பெருமிதம் - 1. வியப்பு
b. மருட்கை - 2. சினம்
c. இளிவரல் - 3. பெருமை
d. வெகுளி - 4. சிறுமை

(A) 1 2 3 4
(B) 2 3 1 4
(C) 3 1 4 2
(D) 3 1 2 4

19. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1: இலக்கியத்தில் வரும் செய்தி கண்ணெதிரே தோன்றும் ஆறு கட்டப்படுவதே மெய்ப்பாடு ஆகும்.
கூற்று 2: மெய்ப்பாடு எட்டு வகைப்படும் என்று தொல்காப்பியம் கூறுகிறது.
மேற்கண்டவற்றில் எது/ எவை சரி?

(A) 1, 2
(B) 1 மட்டும்
(C) 2 மட்டும்
(D) எதுவுமில்லை

20. பிரித்து எழுதுக: தவறானது எது?

(A) வெகுளி = வெகுள் + இ
(B) நகை = நக + ஐ
(C) மருட்கை = மருள் + கை
(D) (A) & (C)

21. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. அண்ணாதுரை நாடகத்தில், சத்ரபதி சிவாஜியாக வேடமேற்று நடித்தவர் வி.சி. கணேசன் ஆவார்.
2. அவருடைய முதல் திரைப்படம் பராசக்தி ஆகும்.
3. அவருக்கு சிவாஜி என்று பெயரிட்டவர் அறிஞர் அண்ணா ஆவார்.

மேற்கண்டவற்றில் எளியவை தவறல்லாதது?

(A) 1, 2, 3
(B) 2, 3
(C) 1, 2
(D) 1, 3

22. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

1. காப்பியத்தை ஆங்கிலத்தில் EPIC என்பர்.
2. இது EPES என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியது.
3. காப்பியம் எனும் சொல்லை, காப்பு + இயம் எனப் பிரித்து மரபை காப்பது, வெளிப்படுத்துவது, மொழியை சிதையாது காப்பது என்றும் காரணம் கூறுவர்.

மேற்கண்டவற்றில் எத்தனை சரி?

(A) 1
(B) 2
(C) 3
(D) எதுவுமில்லை

23. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. தொடர்நிலை என்பது, ஒரு பாடலையும் மற்றொரு பாடலையும் சொல்லாலும் பொருளாலும் தொடர்பு ஏற்படுத்தும் செய்யுள் வகையைக் குறிக்கும்.
2. சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் பொருள்தொடர் நிலைக்கு எடுத்துக்காட்டாகும்.
3. கம்பராமாயணம் போன்ற நூல்கள் சொல்தொடர் நிலைக்கு எடுத்துக்காட்டாகும்.

மேற்கண்டவற்றில் எது சரியற்றது?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) எதுவுமில்லை

24. தவறான இணையைத் தேர்க.

(A) ஆசிரியப்பா - அகநானூறு

(B) விருத்தப்பா - தூது

(C) வெண்பா - நாலடியார்

(D) குறள்வெண்பா - திருக்குறள்

25. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. ஜெகன் மோகினி எனும் இதழை 35 ஆண்டுகள் நடத்தியவர்
2. காந்தியின் கொள்கைகளுக்கு ஈர்க்கப்பட்டு, மேடைப் பேச்சின் மூலம் காந்தியின் கொள்கையைப் பரப்புரை செய்ததோடு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சிறைக்குச் சென்றவர்.

யார் இவர்?

(A) சோமசுந்தர பாரதியார்

(B) ப.ஜீவானந்தம்

(C) வை.மு.கோதைநாயகி

(D) வ.சுப. மாணிக்கம்

26. ன,ண வேறுபாடு அறிக.

'தின்மை - திண்மை'

(A) வீரம் - வளமை

(B) சோம்பல் - வலிமை

(C) தீமை - வளமை

(D) தீமை - வலிமை

27. பின்வருவனவற்றில் நூல்களை நூலாசிரியரோடு பொருந்தாதது எது?

1. மெய்ப்பாடு - தமிழண்ணல்
2. அம்ஷன் குமார் - சினிமா ஆசை
3. காவியத்தமிழ் - இரா.காசிராசன்
4. எனது சுயசரிதை - சிவாஜி கணேசன்

(A) 1, 2

(B) 2, 3

(C) 3, 4

(D) எதுவுமில்லை

28. பின்வரும் திருக்குறளில் பயின்று வந்துள்ள அணி எது?
“உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று”
(A) தொழில் உவமை அணி
(B) பிறிதுமொழிதல் அணி
(C) உவமை அணி
(D) உருவக அணி

29. கீழ்க்கண்ட கூற்றுகளில் எது/எவை சரி?
கூற்று 1 : நாட்டின் நிர்வாகத் திறனுக்கு சான்று, சோழர்கால குடவோலை முறை தேர்தல் - உத்திரமேரூர் கல்வெட்டு.
கூற்று 2: 17 ஆம் நூற்றாண்டில், ஆணையிடும் அரசனும் அடக்கத்துடன் கேட்கும் பணியாளரும் உள்ள சுவரோவியம் - திருநெல்வேலி
(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

30. பின்வருவனவற்றுள் எது தவறு?
(A) வெ.இறையன்பு தமிழ்நாடு அரசின் இந்திய ஆட்சிப் பணி அலுவலராகப் பணியாற்றியவர்.
(B) 1990 ஆம் ஆண்டு முதல் பல்வேறு துறைகளில் பதவிகளை வகித்து வந்தவர்.
(C) இவர் எழுதிய ‘ஏழாவது அறிவு’ என்னும் கவிதை நூல் 1995 ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசு பெற்றது.
(D) சிறுகதை, புதினம், தன்முன்னேற்ற நூல், நம்பிக்கை நூல் என இவரது படைப்புகள் விரிவானது.

31. சங்க இலக்கியங்களில்,
1. உரோமாபுரிச் சிப்பாய்கள் சோழப் போர் படையில் இடம் பெற்றிருந்தார்கள் என்ற குறிப்பு சிலப்பதிகாரத்தில் உள்ளது.
2. ‘நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் ‘ என்று குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டது குறித்து பட்டினப்பலை விவரிக்கின்றது.
மேற்கண்டவற்றில் எது/ எவை தவறு?
(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

32. "ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டு போன திசை......." என்று பாடியவர் யார்?
(A) முனைப்பாடியார்
(B) அவ்வையார்
(C) குமரகுருபரர்
(D) சமண முனிவர்.

33. கவிஞர் தமிழ்நதி தொடர்பான பின்னொரு வாக்கியங்களில் எது சரி?
1. இயற்பெயர் : கலைவாணி
2. ஈழத்தின் திரிகோணமலையை பிறப்பிடமாகக் கொண்டவர்.
3. தற்போது அமெரிக்காவில் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகிறார்.
4. இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பட்டம் பெற்றவர்.
(A) 1, 2, 3
(B) 1, 3, 4
(C) 1, 2, 4
(D) 1, 2, 3, 4

34. 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சத்தினாலும் வெள்ளையர் வஞ்சத்தினாலும் ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளில் தமிழர்கள் கரும்பு தோட்டத் தொழிலாளர்களாகவும் தேயிலைத் தோட்ட கூலிகளாகவும் புலம்பெயர்ந்தனர். அந்த விளிம்புநிலை மக்களின் அழு குரலைப் பற்றி பாடியவர் யார்?
(A) முகமது இராவுத்தர்
(B) சாகுல் ஹமீது
(C) கவிமணி
(D) பாரதியார்

35. "காயினில் அறுத்துக் கவளம் கொளினே; மாநிறைவு இல்லதும்..."
- அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?
(A) ஓர் ஏக்கரில் மூன்றில் ஒரு பங்கு
(B) ஓர் ஏக்கர் பரப்பளவு
(C) ஓர் ஏக்கரில் நான்கில் ஒரு பங்கு
(D) ஓர் ஏக்கரில் பாதி அளவு

36. முடியுடை மூவேந்தர், குறுநில மன்னர், வேளிர் முதலிய சிறப்புடை மக்களின் போர்ச் செய்திகள், கையறுநிலை, நடுகல் போன்ற பல்வேறு பொருண்மைகளை வெளிப்படுத்தும் சங்க இலக்கிய நூல் எது?

(A) மதுரைக்காஞ்சி

(B) அகநானூறு

(C) புறநானூறு

(D) பட்டினப்பாலை

37. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. தென்னிந்தியா, கல்வெட்டுகளின் களஞ்சியமாக திகழ்கிறது.
2. சங்ககாலத்தை அறிய இலக்கியங்கள் மட்டுமே துணைநின்ற நிலையில், கல்வெட்டுகளும் துணையாக இருப்பதை கண்டறிந்த ஆய்வாளர் ஐராவதம் மகாதேவன் ஆவார்.

மேற்கண்டவற்றில் எது /எவை தவறு?

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 1, 2

(D) எதுவுமில்லை

38. வெப்ஸ்டார்ஸ் தேர்டு நியூ இன்டர்நேஷனல் அகராதியின்படி,

1. தொன்மங்கள், சமய நம்பிக்கைகளையும் சடங்குகளையும் விளக்குகின்றன. மேலும், உவமை கதைகளாகவும் மெய்யியல் உருவங்களாகவும் சமுதாயத்திற்கு வழிகாட்டுகின்றன.
2. தொன்மங்களை அறிவியல் முறையில் ஆய்வு செய்யவோ புரிந்து கொள்ளவோ முடியாது.

மேலே உள்ள வாக்கியங்களில் எது சரி?

(A) 1, 2

(B) 1 மட்டும்

(C) 2 மட்டும்

(D) எதுவுமில்லை

39. கீழ்கண்ட தொடர்களை ஆராய்க.

1. இராமாயணத்தின் அகலிகை கதையை வைத்து 'சாபவிமோசனம்' என்ற கதையை எழுதியவர் புலமைப்பித்தன் ஆவார்.
2. 'விட்டகுறை' என்னும் சிறுகதையானது, திருவிளையாடற்புராணத்தின் சிவன், நக்கீரனை வைத்து அழகிரிசாமியால் எழுதப்பட்டது.
3. தொன்மங்களைக் கொண்டு ஜெயமோகன் 'பத்மவியூகம்' எனும் புதினத்தை எழுதியுள்ளார்.

மேற்கண்டவற்றில் எது/ எவை தவறு அல்லாதது?

(A) 1, 2

(B) 2, 3

(C) 1, 3

(D) எதுவுமில்லை

40. "உன் மனம் ஒரு பாற்கடல்
அதைக் கடைந்தால் அமுதம் மட்டுமல்ல
ஆலகாலமும் வெளிப்படும்...." என்று பாடிய கவிஞர் யார்?

(A) தமிழ்நதி

(B) நகுலன்

(C) அப்துல் ரகுமான்

(D) தாராபாரதி

41. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. ஆய்வு நெறிமுறைகளிலும் அணுகுமுறைகளிலும் புதிய சிந்தனைகளை கையாண்டவர்.
2. இவர் சங்ககாலம் தொடங்கிப் பிற்காலம் வரையில் ஆண்ட சோழர் வரலாற்றை முழுமையாக ஆராய்ந்தவர்.
3. சிந்துவெளி நாகரிகம் பற்றி தமிழில் முதன் முதலில் ' மொகஞ்சதாரோ அல்லது சிந்து வெளி நாகரிகம்' என்ற நூலை இயற்றியவர்.

மேற்கூறிய கூற்றுகளுக்கு பொருத்தமான நபர் யார்?

(A) ஆர். பாலகிருஷ்ணன்

(B) ஐராவதம் மகாதேவன்

(C) சு.சக்திவேல்

(D) மா.இராசமாணிக்கனார்

42. “இரவில் விண்மீன் காசினை - செலுத்தி இரவலரோடு பேசுவேன்! இரவெரிக்கும் பரிதியை - ஏழை விறகெரிக்க வீசுவேன்”. - இக்கவிதை வரிகளின் ஆசிரியர் யார்?
(A) நகுலன்
(B) நா.காமராசன்
(C) பூரணி
(D) சந்தாதத்

43. சொல்லும் பொருளும் (வங்கி) : தவறான இணை/ இணைகள் யாது?
1. Teller - வழிகாட்டுபவர்
2. Demand Draft - கேட்பு காசோலை
3. Debit Card - பற்று அட்டை
4. Withdrawal Slip - திரும்பப் பெறல் வடிவம்
(A) 1, 2
(B) 4 மட்டும்
(C) 2, 4
(D) எதுவுமில்லை

44. மயிலை சீனி. வெங்கடசாமி,
1. இவர் சென்னை மயிலாப்பூரில் பிறந்தவர்.
2. தந்தையின் தமிழ் பின்புலம் மற்றும் தமையனாரின் சித்தமருத்துவப் பின்புலம் ஆகியவையே தன்னை வரலாற்று ஆய்வாளராக உருவாக்கியது என்று கூறியவர்.
3. தொடக்கப் பள்ளியில் 25 ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றியவர்.
4. அவருடைய முதல் நூல் ‘கிறிஸ்தவமும் தமிழும்’.
மேற்கண்டவற்றில் எத்தனை சரி?
(A) 1
(B) 2
(C) 3
(D) 4

45. “தாங்கெட நேர்ந்த போதும்
தமிழ்கெட லாற்றா அண்ணல்
வேங்கடசாமி என்பேன்” என்று கூறியவர்.
(A) துரைக்கண்ணன்
(B) கா. சுப்பிரமணியனார்
(C) பாரதிதாசன்
(D) திரு.வி.க

46. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : சங்ககாலத்தில் பசும்பூண் பாண்டியன் தன் கொடியில் எருது சின்னத்தை கொண்டிருந்தான்.

கூற்று 2 : இச்செய்தி அகநானூற்றில் இருப்பதை முதன்முதலில் அறிந்து வெளிப்படுத்தியவர், மயிலை சீனி.வேங்கடசாமி ஆவார்.

மேலே உள்ள கூற்றுகளில் எது/எவை சரி?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

47. சுகந்தி சுப்பிரமணியன் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது தவறு?

(A) நவீன பெண் கவிஞர்களில் குறிப்பிடத் தகுந்தவர்.
(B) இவர் தனித்து விடப்பட்ட பெண்ணின் அனுபவங்களால் நிரம்பியுள்ள அவலங்களை தனது படைப்புகளில் வெளிப்படுத்துபவர்.
(C) இவர் புதையுண்ட வாழ்க்கை நீண்டெழுதலின் ரகசியம் ஆகிய இரு கவிதை தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.
(D) இவருடைய மறைவுக்குப் பிறகு இவரின் கவிதைகளும் சில சிறு கதைகளும் ‘சுகந்தி சுப்பிரமணியன் தொகுப்புகள்’ என்ற பெயரில் வெளிவந்துள்ளன.

48. அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் அறிக.

“பாசம்என உன்னலிர் பிணித்தமை பகைத்த
நீசமனு மக்களை நினைந்து....”

(A) கட்டாதீர், நேசம்
(B) எண்ணாதீர், இழிந்த
(C) கொடியவர், அழுந்த
(D) உண்ணாதீர், அன்பு

49. இலக்கணக்குறிப்பு காண்க. (சரியற்றது எது)

(A) வெங்குருதி - பண்புத்தொகை
(B) ஓர்மின் - ஏவல் பன்மை வினைமுற்று
(C) உன்னலிர் - முன்னிலை ஒருமை வினைமுற்று
(D) பாதகர் - வினையாலணையும் பெயர்

50. கீழ்க்கண்ட கூற்றை கவனி:
   1. இரட்சணிய யாத்திரிகம் நூலானது, 1894 ஆம் ஆண்டு மே திங்களில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது.
   2. திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த ‘நற்போதகம்’ எனும் ஆன்மீக நாளிதழில் இரட்சணிய யாத்திரிகம் 13 ஆண்டுகள் தொடராக வெளிவந்தது.

   மேற்குறிப்பிட்டவற்றில் எது/ எவை சரி?
   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 1, 2
   (D) எதுவுமில்லை

51. ‘கிறித்தவக் கம்பர்’ என்று போற்றப்படும், எச். ஏ.கிருட்டிணனார் எழுதிய நூல்களில் எது பொருந்தாதது?
   1. இரட்சணிய சமய நிர்ணயம்
   2. இரட்சணிய மனோகரம்
   3. போற்றித் திருஅகவல்
   4. இரட்சணிய குறள்

   (A) 1, 2, 3
   (B) 2, 3, 4
   (C) 1, 3, 4
   (D) மேற்கண்ட எதுவுமில்லை

52. பொருத்துக.
   a. ஓரி - 1. மலைநாடு
   b. பேகன் - 2. மலையமா நாடு
   c. காரி - 3. கொல்லிமலை
   d. ஆய் - 4. பொதிய மலை

   (A) 3 2 4 1
   (B) 3 1 2 4
   (C) 3 4 2 1
   (D) 2 3 4 1

53. “ஆலமர் செல்வதற்கு அமர்ந்தனன் கொடுத்த... “ இவ் வரிகளில் உள்ள ஆலமர் செல்வன் என்பவன் யார்?
   (A) சிவபெருமான்
   (B) முருகன்
   (C) திருமால்
   (D) அரசன்

மனிதநேயம் வளர்ப்போம் மனிதநேயம் மீட்போம் சைதை சா. துரைசாமியின் மனிதநேய அறக்கட்டளை

54. கீழ்க்கண்ட கூற்றை கவனி:
   1. வலிமை வாய்ந்த ஆவியர் குலத்தில் பிறந்தவன்.
   2. பெரிய மலை நாட்டுக்கு உரியவன்.
   3. பொதினி மலைக்கு தலைவன்.

   யார் இவன்?

   (A) காரி
   (B) நள்ளி
   (C) பாரி
   (D) பேகன்

55. தானே தனி ஒருவனாக இருந்து அந்த ஈகையின் பாரத்தை தாங்கி இழுத்துச் செல்லும் வலிமை உடையவன், என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது?

   (A) சிவன்
   (B) பேகன்
   (C) நல்லியக்கோடன்
   (D) பாரி

56. சிறுபாணாற்றுப்படை,
   1. பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று.
   2. இதனை இயற்றியவர் நல்லூர் நத்தத்தனார்.
   3. இது ஓய்மா நாட்டு மன்னனை பாட்டுடைத் தலைவனாக கொண்டு பாடப்பட்டது.
   4. இது 369 அடிகளில் எழுதப்பட்ட நூலாகும்.

   மேலே உள்ள தகவல்களில் எது/ எவை சரி?

   (A) 1, 2, 3
   (B) 1, 3
   (C) 1, 3, 4
   (D) அனைத்தும்

57. பின்வரும் வாக்கியங்களில் தவறாக உள்ளதை தெரிவு செய்

   (A) கடல் போன்று ஒலிக்கும் படையினை உடையவன் வள்ளல் அதியன்
   (B) மலைக்காற்று எப்போதும் இருக்கக்கூடிய உயர்ந்த மலை நாட்டை உடையவன் வள்ளல் பாரி.
   (C) நீண்ட வேலினையும் வீரக் கடலையும் உடையவன் வள்ளல் காரி.
   (D) மலைநாட்டை கூத்தர்க்கு பரிசாக வழங்கியவன் வள்ளல் ஓரி.

58. வள்ளல் குமணன் தொடர்பான பின்வரும் கூற்றுக்களை ஆராய்க.

1. இவன் முதிரமலையை ஆட்சி செய்த குறுநில மன்னன் ஆவான்.
2. தன் மகனாகிய இளங்குமணனிடம் நாட்டைக் கொடுத்துவிட்டு காட்டில் மறைந்து வாழ்ந்தவன்.
3. 'தமிழுக்குத் தலை கொடுத்த குமண வள்ளல்' என்று புறநானூறு போற்றுகிறது.
4. கொடுப்பதற்கு எதுவும் இல்லாததால் தன் தலையை அரிந்து, சீத்தலைச் சாத்தனாருக்கு தந்தவன்.

மேற்கண்டவற்றில் எத்தனை சரி?

(A) 4
(B) 3
(C) 2
(D) 1

59. சிறுகதை கோடை மழை பற்றி,

1. ஆசிரியர் காஞ்சிபுரத்தைச் சார்ந்த சாந்தா தத் ஆவார்.
2. இச்சிறுகதை 'இலக்கிய சிந்தனையில்' வெளியானது.
3. இது 'அமுதசுரபி' அமைப்பின் சிறந்த சிறுகதைக்கான விருதைப் பெற்றது.

மேலே உள்ளவற்றில் எது எவை தவறல்லாதது?

(A) அனைத்தும்
(B) 1 மட்டும்
(C) 1, 2
(D) 2, 3

60. கீழ்க்கண்ட கூற்றை கவனி:

கூற்று 1 : குறியீடு என்பது ஒரு புதிய வடிவம் அன்று.

கூற்று 2 : உள்ளுறை உவமம் அக, புற இலக்கியங்களில் உரைக்க முடியாதவை, மறைக்க வேண்டியவை ஆகியவற்றை குறிப்பாக உணர்த்த உதவியது.

கூற்று 3 : குறியீடு என்பது அக இலக்கியங்களில் குறிப்பாக உணர்த்த பயன்படும் இலக்கிய உத்தியாகும்.

மேலே உள்ள கூற்றுகளை ஆராய்ந்து பின்வருவனவற்றுள் சரியான ஒன்றை தேர்வு செய்.

(A) கூற்று 1 சரி 2, 3 தவறு
(B) கூற்று 1 தவறு 2, 3 சரி
(C) அனைத்து கூற்றும் சரி
(D) அனைத்து கூற்றும் தவறு

61. கீழ்காணும் கூற்றுகளை ஆராய்க.

1. தமிழின் சிறப்புகளை பற்றி ஆய்வுகள் பல செய்தமையால் ‘தமிழ் இமயம்’ என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்படுபவர்.
2. ‘எங்கும் தமிழ் எதிலும் தமிழ்’ என்ற கொள்கையை பறைசாற்றுபவர்.
3. ‘தமிழ்வழிக் கல்வி இயக்கம்’ என்ற அமைப்பை நிறுவித் தமிழ் சுற்றுலா மேற்கொண்டவர்.

மேற்கண்ட கூற்றுகளுக்கு பொருத்தமானவர் யார்?

(A) மா. இராசமாணிக்கனார்
(B) சோமசுந்தர பாரதியார்
(C) வ.சுப.மாணிக்கம்
(D) க. சா. சற்குணம்

62. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. ‘தமிழின் செல்வாக்கினாலேயே வடமொழியில் குறிப்புப் பொருள் கோட்பாடு உருவானது’ என்று ஹார்ட் குறிப்பிடுகிறார்.
2. ‘யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்’ என்கிறார் கிரியோர்சன்.

மேற்கண்ட கூற்றுகளில் எது தவறு?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

63. பின்வருவனவற்றுள் நூல்-நூலாசிரியரில் பொருந்தாதது எது?

(A) இயேசு காவியம் - கண்ணதாசன்
(B) எழு பெருவள்ளல்கள் - சிபி கே. சாலமன்
(C) பால்வீதி - அப்துல் இரகுமான்
(D) வீரபாண்டிய கட்டபொம்மன் - அரு. ராமநாதன்

64. “வையகம் முழுவதும் வரிஞன் ஓம்பும் ஓர் செய்
எனக் காத்து இனிதுஅரசு செய்கின்றான்” - என்று கம்பர் யாரைக் குறிப்பிடுகின்றார்?

(A) தசரதன்
(B) இராமன்
(C) சுக்ரீவன்
(D) இராவணன்

65. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1: சங்க இலக்கியமான புறநானூற்றில் யவனரது கப்பல்கள் பற்றியக் குறிப்பு இடம்பெறுகிறது.

கூற்று 2: யவனரை அரண்மனைத் தொழிலாளர்களாக்கி கட்டுப்படுத்தியவன், மாறவர்மன் குலசேகரன் என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது.

மேற்கண்ட கூற்றுகளில் எது/ எவை சரியல்ல?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

66. வெ.இறையன்பு அவர்களின் படைப்புகளில் பொருந்தாது எது?

1. ஏழாவது அறிவு
2. உள்ளொளிப் பயணம்
3. இலக்கியத்தில் மேலாண்மை
4. ஐஏஎஸ் வெற்றிப் படிக்கட்டுகள்

(A) 1, 2, 3
(B) 1, 3, 4
(C) 1, 2, 4
(D) அனைத்தும்

67. தமிழ்நதியின் படைப்புகளில் பொருந்தாத இணைகள் எது ?

(A) கவிதைத் தொகுப்பு - இரவுகளில் பொழியும் துயரப்பனி
(B) புதினம் - பார்த்தீனியம்
(C) சிறுகதை - நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது
(D) நாவல் - கானல்வரி

68. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. 'தேயிலைத் தோட்டப்பாட்டு' என்று அழைக்கப்படும் கும்மிப்பாடல் 'பாரத மக்களின் பரிதாபச் சிந்து' என்றும் கூறப்படுகிறது.
2. இது வெகுசன இலக்கியம், முச்சந்தி இலக்கியம், குஜிலி நூல்கள் என்று பலவாறாக அழைக்கப்படுகின்றன.

மேற்கண்ட வாக்கியங்களில் எது/எவை சரி?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

69. பின்வரும் தொடர்களை கவனி.

1. தென்தமிழ் நாட்டில் உள்ள குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளில் ‘பிராம்மி’ எழுத்துக்கள் இருப்பது தெரியவந்துள்ளது.
2. அதனுடன் தமிழி, தரமிழி, திராவிடி என்று அழைக்கப்படுகின்ற வேறுபட்ட வரிவடிவங்களும் இருப்பதை ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.
3. இவை அசோகர் காலத்திய பிராம்மி வரிவடிவத்தினை ஒத்திருப்பதாக தெரியவந்துள்ளது.

மேலே உள்ளவற்றில் எத்தனை தவறல்ல ?

(A) 1, 2
(B) 2, 3
(C) 1 மட்டும்
(D) 2, 3 & 1

70. புகளூர் கல்வெட்டு,

1. இதில் மூன்று தலைமுறை மன்னர்கள் முறையே பதிற்றுப்பத்தின் 6, 8, 9வது பாட்டுடைத் தலைவர்கள் என்று ஐராவதம் மகாதேவன் எழுதியிருக்கிறார்.
2. 1927-28 ஆம் ஆண்டுகளின் தொகுதியில் புகளூர் கல்வெட்டுகளை பற்றிய செய்திகள் முதன்முதலாக கிடைத்தன.
3. புகளூரில் ஆறுநாட்டான் குன்றின் மீது சேரல் இரும் பொறை மன்னரின் கல்வெட்டுகள் கிடைக்கப்பெற்றன.

மேல் உள்ள வாக்கியங்களில் எது சரியாக உள்ளது?

(A) 1, 3
(B) 2, 3
(C) 1, 2, 3
(D) 1, 2

71. மா.இராசமாணிக்கனார் எழுதிய நூல்களில் தவறானது எது?

1. சேரர் வரலாறு
2. தமிழ்நாட்டு தென் எல்லை
3. பெரியபுராண ஆராய்ச்சி
4. புதிய தமிழகம்

(A) 1, 2
(B) 3, 4
(C) 4 மட்டும்
(D) 1 மட்டும்

72. மரபுப் பிழையற்ற தொடரை தேர்வு செய்.

(A) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

(B) கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டிக் கூரை அமைத்தான்.

(C) ஆட்டுப்பட்டியைச் சுற்றிலும் எலிகள் வளைகள் அமைத்திருந்தன.

(D) வாழைத்தோப்பில் குயில்கள் கூவிக் கொண்டும் காகங்கள் அலறிக் கொண்டும் இருந்தன.

73. நூல் - நூலாசிரியர் : சரியானவை எவை?

1. முள்ளும் மலரும் - உமா சந்திரன்
2. முச்சந்தி இலக்கியம் - இரா.வெங்கடாசலபதி
3. வெள்ளை இருட்டு - அப்துல் ரகுமான்
4. நீர்க்குமிழி - கே பாலச்சந்தர்

(A) 2 மட்டும்

(B) 3 மட்டும்

(C) 1, 2

(D) 2, 3

74. மயிலை சீனி. வேங்கடசாமி,

1. தமிழர்களின் இருண்ட காலம் களப்பிரர் காலம், என்ற புதிய கண்ணோட்டத்தை 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' என்னும் நூல் மூலம் வெளிப்படுத்தியவர்.
2. தமிழர்களின் கலைத்திறனை எடுத்தியம்பும் ' தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்' என்னும் நூல் தமிழில் கவின்கலைகள் குறித்து முதலில் வெளிவந்த முழுமையான நூல் ஆகும்.
3. 'பழந்தமிழர் வரலாறு' என்னும் நூல் இவருடைய மீட்டுருவாக்க முயற்சிக்கு சரியான சான்றாகும்.
4. மேலும் 'மறைந்து போன தமிழ் நூல்கள்' என்னும் நூல் இவரது அரிய ஆவணப் பணிகளில் ஒன்றாகும்.

மேற்கண்டவற்றில் எத்தனை தகவல்கள் சரி?

(A) 1

(B) 2

(C) 3

(D) 4

75. சொல்லும் பொருளும் : எத்தனை இணைகள் சரி?

1. உததி - கடல்
2. மாற்றம் - குற்றம்
3. ஏதமில் - சொற்கள்
4. கூவல் - கிணறு

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

76. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. பில்க்ரிம்ஸ் புரோகிரஸ் எனும் ஆங்கில நூலை எழுதியவர் ஜான் பேனியன் ஆவார்.
2. இந்நூலை தழுவி இரட்சணிய யாத்திரிகம் படைக்கப்பட்டது.
3. இது 3766 பாடல்களைக் கொண்ட உவமைக் காப்பியம் ஆகும்.
4. இது நான்கு பருவங்களைக் கொண்ட காப்பியமாகும்.

மேலே உள்ளவற்றில் எவை சரி?

(A) அனைத்தும்
(B) 1, 2, 4
(C) 1, 2, 3
(D) 1, 2

77. பொருத்துக: (பொருள் அறிக)

a. சுரும்பு - 1.வில்
b. கலிங்கம் - 2.செறிவு
c. உறழ் - 3.ஆடை
d. சாவம் - 4.வண்டு

(A) 3 2 4 1
(B) 4 2 1 3
(C) 4 3 2 1
(D) 2 3 4 1

78. இலக்கணக்குறிப்பு வரைக. (சரியானதை தேர்க).

(A) நீலம் - ஆகுபெயர்
(B) அரவக்கடல் - ஆறாம் வேற்றுமை உருபு பயனும் உடன் தொக்கத் தொகை
(C) மலைதல் - வினைத்தொகை
(D) கவாஅன் - சொல்லிசை அளபெடை.

79. பாடல்வரிகளுக்கு ஏற்ற நூல்களை ஆராய்க.

1. நீடு இரு விடர் அகம் சிலம்பக் கூய்த் தன் - கலித்தொகை
2. கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது - அகநானூறு
3. தொன்மை தானே சொல்லும் காலை - தொல்காப்பியம்
4. யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான் - புறநானூறு

மேலே உள்ளவற்றில் எத்தனை சரி?

(A) 1

(B) 2

(C) 3

(D) 4

80. சாந்தா தத்,

1. இவர் ஹைதராபாத்தில் வெளியாகும் ‘ நிறை ‘ மாத இதழின் ஆசிரியராக உள்ளார்.
2. ‘திசை எட்டும் ‘ என்ற மொழிபெயர்ப்பு இதழின் ஆசிரியர் ஆவார்.
3. இவருடைய மொழிபெயர்ப்புகளை சாகித்திய அகாடமி வெளியிட்டுள்ளது.
4. மனிதநேயம் இவர் கதைகளில் வெளிப்படும் அடிப்படை பண்பாகும்.

மேற்கண்ட தகவல்களில் எது/எவை தவறு?

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 1, 2

(D) எதுவுமில்லை

81. பின்வரும் கவிதை வரிகளுக்குறிய ஆசிரியரை தேர்வு செய்.

1. வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக?
2. இறுகிப் படிந்த துயரத்தோடும் எஞ்சிய மனிதர்களோடும் மீண்டிருக்கிறோம்.

(A) நகுலன், தமிழ்நதி

(B) அப்துல் ரகுமான்,

(C) அப்துல் ரகுமான், நகுலன்

(D) தமிழ்நதி, நகுலன்

82. பின்வரும் வாக்கியங்களை தவறான ஒன்றை தேர்வு செய்.

(A) சென்னை பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை கோவிலும் திருவல்லிக்கேணியில் கிடைக்கும் நந்திவர்மன் கல்வெட்டும் பல்லவர்கள் இப்பகுதியில் சிறந்து விளங்கியதை காட்டுகிறது.

(B) கிபி 1647 இல் எழுதப்பட்ட பத்திரத்தில், “தொண்டமண்டலத்துப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டுச் சென்னப்பட்டினம்” என்று உள்ளது.

(C) சேத்துப்பட்டு, நுங்கம்பாக்கம், மாதவரம் போன்ற பகுதிகள் 400 ஆண்டுகளுக்கு முன்னரே புகழ் பெற்ற கிராமங்களாக இருந்துள்ளன.

(D) இன்று சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர், கிபி. 2ஆம் நூற்றாண்டில் பிளினி என்பவரால் ‘மல்லியர்பா ‘ எனும் துறைமுகமாக சுட்டப்பட்டுள்ளது.

83. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பிய கல்வி முறை பள்ளி, சென்னையின் புனித மேரி தேவாலய தர்மப்பள்ளி ஆகும்.
2. ஆங்கிலேயரின் நிதி உதவி இன்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம் பச்சையப்பன் கல்லூரி ஆகும்.
3. 1918 ஆம் ஆண்டில் பெண்களுக்கென தொடங்கப்பட்ட இராணிமேரி கல்லூரி பெண் கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனம் ஆகும்.

மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரியாக உள்ளது?

(A) 1, 2, 3
(B) 1, 2
(C) 1, 3
(D) 2, 3

84. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. 1837 | - 1. | சென்னை கோட்டைக் கல்லூரி |
| b. 1812 | - 2. | பிரசிடென்சி பள்ளி |
| c. 1857 | - 3. | சென்னை கிருத்துவக் கல்லூரி |
| d. 1840 | - 4. | சென்னை பல்கலைக்கழகம் |

(A) 3 1 4 2
(B) 2 4 1 3
(C) 4 3 2 1
(D) 2 1 3 4

85. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : இந்தியாவின் முதல் பொதுநூலகம் கன்னிமாரா நூலகம் ஆகும்.

கூற்று 2 : இந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம், 1856 இல் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

மேற்கண்ட கூற்றுகளில் எது தவறு ?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 1, 2
(D) எதுவுமில்லை

86. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்ந்து பிழையான தொடரை தெரிவு செய்.

(A) 1646 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி சென்னை நகரின் மக்கள் தொகை 19000 ஆகும்.
(B) இந்த வளர்ச்சியை அறிந்து, 1688 இல் சென்னை நகராட்சி உருவாக்கப்பட்டது.
(C) சென்னை மாகாணத்தின் முதல் தலைவர், எலிஹூ யேல் ஆவார்.
(D) எலிஹூ யேலின் ஆட்சிக் காலத்தை 'சென்னையின் பொற்காலம்' என்பர்.

87. திருவருட்பா,

1. இதன் ஆசிரியர் இராமலிங்க அடிகள்.
2. ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் தன்மையுடையவை இவரது பாடல்கள்.
3. இந்நூல், ஆறு திருமுறைகளாக பகுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவற்றில் எத்தனை சரி?

(A) 1
(B) 2
(C) 3
(D) எதுவுமில்லை

88. கீழ்க்கண்ட வாக்கியங்களை ஆராய்ந்து எது/எவை தவறு என்பதை தேர்வு செய்.

1. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.
2. இந்த தேவாரப் பாடல்கள் இசை பாடல்களாகவே விளங்குகின்றன.
3. இப்பாடல்களை தொகுத்தவர் நாதமுனி ஆவார்.

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) எதுவுமில்லை

89. பொருந்தாத இணை எது : சொல்லும் பொருளும்

(A) ஞமலி - நாய்

(B) பகடு - கிடா

(C) வேட்டம் - மீன் பிடித்தல்

(D) கதழ் - மலை

90. அகநானூறு பிரிவுகள், பாடல்களின் எண்ணிக்கை : சரியாகப் பொருந்தி உள்ள இணை எது?

1. களிற்றியானைநிரை - 180
2. மணிமிடைபவளம் - 120
3. நித்திலக்கோவை - 100

(A) அனைத்தும்

(B) 3 மட்டும்

(C) 1, 2

(D) 2, 3

91. எழுத்தாளர்கள் - வட்டார வழக்கு தமிழ்.(தவறான இணை எது)

(A) புதுமைப்பித்தன் - மதுரைத்தமிழ்

(B) சண்முகசுந்தரம் - கோவைத்தமிழ்

(C) ஜெயகாந்தன் - சென்னை வட்டாரத் தமிழ்

(D) தோப்பில் முகமது மீரான் - குமரித்தமிழ்

92. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : தோப்பில் முகமது மீரான் சாய்வு நாற்காலி எனும் புதினத்திற்கு 1995இல் சாகித்திய அகாடமி விருது பெற்றார்.

கூற்று 2 : இவரது துறைமுகம், கூனன் தோப்பு ஆகிய படைப்புகள் தமிழக அரசின் விருது பெற்றுள்ளன.

(A) கூற்று 1 சரி 2 தவறு

(B) கூற்று 1 தவறு 2 சரி

(C) கூற்று 1, 2 சரி

(D) கூற்று 1, 2 தவறு

93. கவிதை மற்றும் அதற்குரிய ஆசிரியர்களை சரியாக பொருந்தி உள்ளது தேர்வு செய்.

1. வெயில் மழைக்கு சொரணையற்ற எருமை குத்திட்ட பாறையாக நதிநீரில் கிடக்கும் - முனுசாமி.
2. காலை இளம் வெயில் நன்றாக மேய துன்புறுத்துத் துள்ளிவரும் புதுவெயில் - கல்யாண்ஜி.
3. மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்திருக்கிறது - ந.பிச்சமூர்த்தி.

(A) அனைத்தும்
(B) 1, 2
(C) 2, 3
(D) 1, 3

94. சோமசுந்தர பாரதியார்,

1. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை தலைவராக பணியாற்றியுள்ளார்.
2. இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் முன் நின்று செயலாற்றியவர்.
3. சமூக சீர்திருத்தங்களில் ஈடுபாடு கொண்டு சடங்குகள் இல்லாத திருமண விழாக்களை முன்னின்று நடத்தியவர்.
4. இவர் வ உ சி, சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீதான வழக்குகளில் அவர்களுக்காக வாதாடியது குறிப்பிடத்தகுந்தது.

மேலே உள்ள தகவல்களில் எது /எவை தவறு!?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 4 மட்டும்
(D) எதுவுமில்லை

95. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. அசையும் உருவங்களை படம் பிடிக்கும் கருவியை கண்டுபிடித்தவர் தாமஸ் ஆல்வா எடிசன்.
2. படப்பிடிப்பு கருவியோடு திரையிடும் கருவியையும் சேர்த்து திரைப்படம் என்னும் விந்தையை இந்த உலகிற்கு அளித்தவர், ஜார்ஜ் மிலி.
3. திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் என்று கண்டுபிடித்தவர்கள் லூமியர் சகோதரர்கள்.

மேற்கண்ட தகவல்களில் எது/ எவை சரியல்ல?

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) (B) & (C)

96. சார்லி சாப்ளின்,
   1. இலண்டனில் பிறந்தவர்.
   2. வறுமைமிக்க தன் இளமை வாழ்வை ‘தி கிட்’ என்று வெற்றி படமாக்கினார்.
   3. அவருடைய பட நிறுவனம் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் ஆகும்.

   மேலே உள்ளவற்றில் எது எவை சரி?

   (A) 1, 2, 3
   (B) 2, 3
   (C) 1, 2
   (D) 1, 3

97. நகுலன் கவிதைகளில் பொருந்தாதது எது?
   (A) மூன்று
   (B) ஆறு
   (C) நாய்கள்
   (D) சுருதி

98. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. மாதவி 7 ஆண்டு வரை ஆடல்கலையை பயின்றாள்.
   2. அவள் தனது 14 வது வயதில் ஆடலை அரங்கேற்ற விரும்பினாள்.
   3. சோழ மன்னனிடம் ஆயிரத்தெட்டுக் கழஞ்சுப் பொன் மாலையை பரிசாகப் பெற்றாள்.

   மேற்குறிப்பிட்டுள்ள வாக்கியங்களில் எது /எவை சரி?

   (A) 1, 2
   (B) 2, 3
   (C) 1, 3
   (D) எதுவுமில்லை

99. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.
   1. வடமொழியில் ‘காவ்யதர்சம்’ என்ற நூலைத் தழுவி தமிழில் எழுதப்பட்ட அணியிலக்கண நூல் தண்டியலங்காரம் ஆகும்.
   2. பெருங்காப்பியத்திற்குரிய நான்கு வகை உறுதிப் பொருள்களும் பிற உறுப்புகளும் முழுமையாக அமையப்பெற்று விளங்கும் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும்.
   3. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு நூல் ஒன்றோ இரண்டோ குறைந்து வருவது சிருங்காப்பியம் ஆகும்.

   மேற்கண்ட கூற்றுகளில் எது/எவை சரியல்ல?

   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) (A) & (B)
   (D) எதுவுமில்லை

100. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. விருத்தம் என்னும் ஒரே வகைச் செய்யுள்களில் அமைந்தவை சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் ஆகும்.
2. பாட்டும் உரைநடையும் கலந்து பல்வகைச் செய்யுள்களில் அமைந்தது சிலப்பதிகாரம் ஆகும்.

மேல் உள்ள கூற்றுகளில் எது/ எவை தவறு?

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 1, 2

(D) எதுவுமில்லை

******

மனிதநேயம் வளர்ப்போம் • மானுடம் மீட்போம்
சைதை சா. துரைசாமியின் மனிதநேய அறக்கட்டளை